**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 130/2020</u>**

நாள் 19.11.2025

PW1 – சுப்பிரமணியம்

த/பெ – லேட்.கருப்பண்ண கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of November 2025)**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. நவரத்தினத்திற்கு B செட்டியூல் சொத்தாக ஒதுக்கப்பட்ட 2.87 ஏக்கர் சொத்தில் 1/3 பங்கு சொத்தை 04.04.2007–ம் தேதியிட்ட பாகபாத்திய விடுதலை பத்திரத்தை நவரத்தினம் அவரது சகோதரரான சின்னச்சாமி கவுண்டர், பாட்டைய கவுண்டர் ஆகியோருக்கு எழுதி கொடுத்து விட்டார் என்றால் சரிதான். அந்த பத்திரம் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது. அதனால், அந்த 2.87 ஏக்கர் சொத்திற்கு சின்னச்சாமி கவுண்டர் மற்றும் அவரது அப்பா பாட்டைய கவுண்டர் ஆகியோர் தான் உரிமையாளர்கள் என்றால் சரிதான். அந்த 2.87 ஏக்கரில் 1.72 ஏக்கர் சொத்தை கடந்த 12.04.2016–ம் தேதியிட்ட பதிவு கிரைய பத்திரம் மூலம் 7–ம் பிரதிவாதிக்கு பாட்டைய கவுண்டரும், சின்னச்சாமியும் கிரையம் கொடுத்து விட்டார்கள் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தில் நான்கு பக்க எல்கைகள் கண்டு தான் 1.72 ஏக்கர் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது பொய் என்றும் அந்த 1.72 ஏக்கர் சொத்திற்கு உரிய செக்குபந்தி கொடுத்து தான் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், இருந்தும் இந்த வழக்கிற்காக வேண்டி நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. அதனால், 7-ம் பிரதிவாதி கிரையம் பெற்ற 1.72 ஏக்கர் சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

2. மேற்படி வீதம் 7-ம் பிரதிவாதி கிரையம் பெற்ற விபரம் 2020-ம் ஆண்டில் தான் எனக்கு தெரிய வந்தது. அந்த 12.04.2016-ம் தேதியிட்ட கிரைய பத்திரம் தாவா சொத்தில் எனக்கு உள்ள கூட்டு பாத்திய உரிமையை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்று பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான். 7-ம் பிரதிவாதி தான் கிரையம் பெற்ற 1.72 ஏக்கர் சொத்தில் தனித்த சுவாதீன அனுபவத்தில் இருந்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல, சொத்து பொதுவில் தான் இருந்து வருகிறது. 7-ம் பிரதிவாதி தான் கிரையம் பெற்ற 1.72 ஏக்கரில் ஒரு கட்டிடம் கட்டியுள்ளார் என்றால் இல்லை, நாங்கள் தான் 10 X 16 அடி வீதம் ஒரு ரூமை கட்டியுள்ளோம். அந்த சொத்தில் 7-ம் பிரதிவாதி தென்னை மரம் வைத்து வளர்த்து வருகிறார் என்றால் இல்லை. 7-ம் பிரதிவாதி கிரையம் பெற்ற 1.72 ஏக்கரில் உள்ள ஆழ்துளை கிணற்றிற்கு 7-ம் பிரதிவாதி தமிழக அரசிடம் இருந்து மானியம் பெற்று சோலார் அமைத்து தண்ணீர் பாய்ச்சி வருகிறார் என்றால் சரியல்ல. மேற்படி விபரங்கள் எனக்கு நன்கு தெரிந்திருந்தும் இந்த வழக்கிற்காக வேண்டி பொதுவில் இருந்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த தென்னை மரங்களுக்கு தற்போது சுமார் 9,10 வயது இருக்கும். நான் 7-ம் பிரதிவாதியுடன் சொத்தை கூட்டாக அனுபவித்து வருவதாக நான் சொல்லும் நிலையில் 7-ம் பிரதிவாதி சொத்தில் தென்னை மரம் நடவு செய்த போது நான் எந்தவொரு ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் இரண்டு பேரும் கூட்டாக தான் தென்னை மரம் நடவு செய்தோம்.

3. ரீ–சர்வே எண். 113 சொத்தை பொறுத்து நான்கு பக்க செக்குபந்தி கொடுத்து தான் கடந்த 04.04.2007–ம் தேதியிட்ட பாகபாத்திய விடுதலை பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது பொய் என்றும், நான்கு பக்க செக்குபந்தியும் கண்டு தான் விடுதலை பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த 04.04.2007–ம் தேதியிட்ட பாகபாத்திய விடுதலை பத்திரம் செல்லாது என்று நான் பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரியல்ல. ரீ–சர்வே எண்.113–ல் 8.20 ஏக்கர் மொத்த பரப்பாக உள்ள நிலையில் அதில் எனது முன்னோர்களுக்கு எவ்வளவு சொத்து பாத்தியம் என்று வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் 37 சென்ட் மட்டும் தான் எங்களுக்கு பாத்தியம். நான் எந்த தேதியில் பிரதிவாதிகளை அணுகி பாகம் கேட்டோம் என்றால் 2020–ம் ஆண்டில் தான் சின்னச்சாமி முன்னிலையில் கேட்டேன். மேற்படி விபரத்தை எனது பிராதுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக பாகம் கேட்டு வழக்கறிஞர் மூலம் சட்ட அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் 7–ம் பிரதிவாதியை அணுகி எந்த காலத்திலும் பாகம் கேட்டது கிடையாது என்றால் சரியல்ல. அவ்வாறு பாகம் கேட்க எனக்கு உரிமையே இல்லை என்று சொன்னால் சரியல்ல. 7–ம் பிரதிவாதி கிரையம் பெற்ற 1.72 ஏக்கருக்கு ரீ–சர்வே எண்.113/2 என்று உட்பிரிவு செய்யப்பட்டு அதற்கு பட்டா எண்.927 என்று 7–ம் பிரதிவாதி பெயரில் தனிப்பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால், நான் கேட்டுள்ள பாகப்பிரிவினை பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வழக்கு மூலம் எதுவும் எழாத நிலையிலேயே நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய

வேண்டும் என்றால் சரியல்ல. 7–ம் பிரதிவாதி கிரையம் பெற்ற 1.72 ஏக்கர் சொத்தானது அவருடைய தனிப்பட்ட சொத்து என்பதால் அந்த சொத்திற்கு எதிராக நான் கோரியுள்ள உறுத்துகட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. அதனால், தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR
Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.11.19 10:24:04 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**